15-09-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 31.12.2001

இந்த புத்தாண்டில் வெற்றி பவ எனும் வரதானத்தின் மூலம் தந்தை மற்றும் தன்னை வெளிப்படுத்துதலை அருகே கொண்டு வாருங்கள்.

இன்று புது யுக படைப்பாளர் தனது மாஸ்டர் புது யுக படைப்பாளர் குழந்தைகளுடன் புத்தாண்டை கொண்டாட வந்துள்ளார். புத்தாண்டை கொண்டாடுவது, இதை உலகில் அனை வருமே கொண்டாடுகின்றனர். ஆனால் நீங்கள் அனைவரும் புதிய யுகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். புதிய யுகத்திற்கான குஷி ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் உள்ளது. புதிய யுகம் வந்தே வந்து விட்டது என்பதை புரிந்துள்ளீர்கள். உலகினர் புத்தாண்டை ஒரு நாள் கொண்டாடுகிறார்கள். நீங்கள் அனைவரும் புதிய யுகத்தை சங்கம யுகம் முழுவதும் கொண்டாடுகின்றீர்கள். புத்தாண்டில் ஒருவருக்கொருவர் மகிழ்ந்து பரிசுகளை வழங்குவார்கள். அதுவும் என்ன பரிசு, சிறிது நேரத்திற்கான பரிசு. புதிய யுகத்தை படைக்கும் தந்தை உங்களுக் காக என்ன பரிசு கொண்டு வந்துள்ளார்? பொன்னான பரிசு, அந்த பொன்னான பரிசில் பொன்னான யுகம். அங்கே இயல்பாகவே எல்லாமே பொன்னாகவும், புத்தம் புதியதாகவுமே இருக்கும். இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகு புத்தாண்டு ஆரம்பமாகும். ஆனால் எல்லாமே புதியதாகாது. உங்களுடைய புதிய யுகத்திலோ இயற்கையும் புத்தம் புதியதாகி விடும். ஆத்மாவும் புதிய ஆடை (தேகம்) அணிந்து கொள்ளும். ஒவ்வொரு பொருளும் புதியதாக சதோபிரதானமாக பொற்காலமாகும். புத்தாண்டை கொண்டாடும் உங்கள் மனதில், புத்தியில் புதிய யுகம் தானே நினைவில் வருகிறது. புது யுகம் நினைவுள்ளதா? இன்றைய புதிய வருடம் நினைவுள்ளதா?

பாப்தாதா முதலில் வாழ்த்து தருகின்றார். புதிய யுகத்திற்கு பிறகு அத்தடன் புத்தாண்டிற்கான வாழ்த்து தருகின்றார். ஏனெனில் நீங்கள் அனைவரும் புத்தாண்டை கொண்டாட வந்துள்ளீர் கள். கொண்டாடுங்கள், நன்கு கொண்டாடுங்கள்,. பாப்தாதா மூலமாக கிடைத்துள்ள அழியாத பரிசுக்காக அழியாத வாழ்த்தை கொண்டாடுங்கள். எப்போதுமே ஒருவருக்கொருவர் சுப பாவனை எனும் வாழ்த்தை வழங்குங்கள். இதுவே உண்மையான வாழ்த்து. வாழ்த்து வழங்கும்போது தானும் மகிழ்ந்து பிறரும் மகிழ்கின்றனர். உண்மையான உளப்பூர்வமான வாழ்த்து என்பது ஒருவருக்கொருவர் மீதான உளமார்ந்த நல்லாசி மற்றும் நல் விருப்பங் களெனும் வாழ்த்தே ஆகும். சுபபாவனை என்பது அத்தகைய ஒரு வாழ்த்தாகும். ஒருவர் எப்படிப்பட்ட பாவனை உள்ளவராயினும் தீ பாவனை உள்ளவராக ஆயினும் அவரையும் நல்ல பாவனை உள்ளவராக மாற்றிவிடும். சுபாவமும் மாறிவிடும். உண்மையில் சுபாவ் என்ற சொல்லின் அர்த்தமே சுவ (ஆத்மா) வின் பாவனைன. அதாவது சுப பாவனை. ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இதனையே அழியாத வாழ்த்தாக வழங்கிக் கொண்டே செல்லுங்கள். யார் உங்களுக்கு எதைக்கொடுத்தாலும் நீங்கள் அனைவருக்கும் சுபபாவனையே கொடுங்கள். அழிவற்ற ஆத்மாவின் அழியாத ஆத்மீக நிலையில் நிலைத்திருப்பதால் ஆத்மா மாற்றம் அடைகிறது. ஆக இந்த புதிய ஆண்டில்

விசேஷமாக என்ன செய்வீர்கள்? தன்னிலும், பிறரிலும், சேவையிலும் புதிய ஆண்டு என பெயர் சொன்னாலே ஏதேனும் புதுமையாக செய்ய வேண்டும் தானே! என்ன புதுமை செய்வீர்கள்? ஒவ்வொருவரும் தன்னுள் புதுமைக் கான திட்டம் வைத்துள்ளீர்களா, இப்போது புத்தாண்டை மட்டும் கொண்டாடலாமா? சந்திப்பை கொண்டாடினோம், புத்தாண்டை கொண்டாடினோம், புதுமைக்காக என்ன திட்டம் தீட்டினோம்?

பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் எதிரில் இருப்பவர், உள்நாடு, வெளி நாட்டில் இருப்பவர், அறிவியல் சாதனங்கள் மூலமாக கேட்டுக் கொண்டிருப்பவர், பார்த்துக் கொண்டிருப்பவர் அனைவருக்கும் இந்த ஆண்டு சமயத்திற்கேற்ப விசேஷமாக இதனையே அறிவுறுத்துகின்றார். பாப்தாதாவும் அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனை வரும் ஓய்வாக, ஆனந்தமாக பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதா அதிபிரியமான மிக இனிமையான அகிலமெங்கும் உள்ள குழந்தைகளுக்கு இதனையே கூறுகின்றார். தனது இந்த பிராமண வாழ்வில் அமிர்தவேளை முதல் இரவு வரையிலும் சேமிப்பு கணக்கை அதிகரியுங் கள், வருமானத்தையும் அதிகரியுங்கள், ஒவ்வொருவரும் அவரவர் செயலுக்கேற்ப தமது திட்டம் அமையுங்கள். பிராமண வாழ்வில் கிடைத்துள்ள பொக்கிஷங்கள் யாவும் ஒவ்வொன்றிலும் சேமிப்புக் கணக்கு, வருமான கணக்கு அதிமாக வேண்டும். ஏனெனில் இன்று பாப்தாதா முழு ஆண்டிற்குமான அனைத்து குழந்தைகளின் கணக்கின் ரிசல்ட்டைப் பார்த்தார். என்ன பார்த்தார், தெரிந்திருப்பீர்கள். ஆசிரியர்களும் தெரிந்திருப்பீர்கள். இரட்டை அயல் நாட்டவரும் தெரிந்திருப்பீர்கள். மகாரதிகளும் தெரிந்திருப்பீர்கள். சேமிப்புக் கணக்கு எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு உள்ளதா..... என்ன சொல்வது? நீங்களே சொல்லுங்கள். ஏனெனில் பாப்தாதாவிற்குத் தெரியும் அனைத்து பொக்கிஷங்களையும் சேமிக்கும் நேரம் இந்த சங்கமயுகம் மட்டுமே தான். இந்த சிறிய யுகத்தில் எந்தளவு சேமிப்பு செய்வீர்களோ அதற்கேற்பவே கல்பம் முழுவதும் பலனை அடைவீர்கள். உங்களது சுலோகன் உள்ளதல்லவா! அது என்ன சுலோகன்? இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை... அப்படியானால் என்ன? இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை.. இந்த சுலோகன் புத்தியில் நன்றாகவே உள்ளது. ஆனால் உள்ளத்தில் நினைவில் இருப்பதும், மறப்பதும் ஆகிறது. அனைத்திலும் மிகப்பெரிய பொக்கிஷம் இந்த பிராமண வாழ்வின் உயர்ந்த ஆதாரம் - சங்கல்பம், சமயம், சக்திகள் ஞான மெனும் பொக்கிஷங்களே. மேலும் ஸ்தூலமான செல்வமெனும் பொக்கிஷமே பொதுவானது. ஆக பாப்தாதா பார்க்கின்றார் பிராமணர்கள் ஒவ்வொரு வரும் சிரேஷ்ட சங்கல்பம் மூலமாக தனக்கும் சேவையிலும் சிரேஷ்டமாக்க முடியும். இப்போது இதில் கவனம் செலுத்த வேண்டும்.

பிராமணர்களான உங்களுடைய ஒரு உயர்ந்த நல்லெண்ணத்தில் அவ்வளவு சக்தி உள்ளது, ஆத்மாக்களுக்கு மிகுந்த ஒத்துழைப்பு தரவல்லது. சங்கல்ப சக்தியின் மகிமையை இப்போது எவ்வளவு வேண்டுமோ உயர்த்தலாம்.அறிவியல் சாதனமான ராக்கெட் தொலைவில் இருந்தபடியே எங்கு வேண்டுமோ, எப்போது வேண்டுமோ, எந்த இடத்தை சென்றடைய வேடுமோ ஒரு நொடியில் சென்றடைய வைக்க முடிகிறது. உங்களது உயர்ந்த நல்லெண்ணத் திற்கு முன்னால்அதே ராக்கெட் எம்மாத்திரம். மிகத் தெளிவான

விதி மூலம் காரியத்தில் செயல்படுத்திப் பாருங்கள். உங்களது விதியால் மிக உயர்ந்த செயல் கைகூடும். ஆனால் இப்போது உள்நோக்கு முகமெனும் பட்டியில் அமருங்கள். ஆக இந்த ஆண்டு தமது அனைத்து பொக்கிஷங்களின் சேமிப்புக் கணக்கினை அதிகரிப்பதற்கு திட்டம் தீட்டுங்கள், சேமிப்புக் கணக்கை அதிகப்படுத்துங்கள். முழு நாளிலும் தனக்குத் தானே அகநோக்கு முகமாக பட்டியில் அமருவதற்கு நேரத்தை ஒதுக்குங்கள். உங்களுக்கு நீங்களே செய்யலாம், பிறர் செய்ய இயலாது. பாப்தாதா பிரத்யட்ச ஆண்டிற்கு முன்பே வெற்றிக்கான ஆண்டு என கூறுகின்றார். வெற்றிக்கான ஆதாரம் ஒவ்வொரு பொக்கிஷத்தையும் இலாபகரமாக பயன்படுத்த வேண்டும். இலாபகரமாக பயன்படுத்துங்கள். வெற்றி பெறுங்கள். வெற்றி பிரத்யட்சத்தாவை தானாகவே வெளிப்படுத்தும். சொல்லால் சேவை நன்கு செய்தீர்கள் ஆனால் இப்போது வெற்றி எனும் வரதானத்தின் மூலம் தந்தை மற்றும் தன்னுடைய வெளிப்பாட்டை அருகே கொண்டு வாருங்கள். பிராமண வாழ்வில் ஒவ்வொருவருமே அனைத்து பொக்கிஷங்களையும் நிரம்பிய வர்கள என்பது ஆத்மாக்களுக்கு அனுபவம் ஆக வேண்டும். இன்றைய ஆத்மாக்கள் அனுபவி மூர்த்தியான உங்கள் மூலமாக அனுமூவம் பெற விரும்புகின்றனர். கேட்பதற்கு குறை வாகவும் அனுபவமே அதிகம் விரும்புகின்றனர். அனுபவத்தின் ஆதாரம் பொக்கிஷங்களின் சேமிப்பு கணக்கு. இப்போது முழு நாளிலும் இடையிடையே பொக்கிஷம் அனைத்திலும் எவ்வளவு சேமிப்பு செய்தார்? என சோதனை செய்யுங்கள். சேமிப்பை பாருங்கள், கணக் கெடுங்கள். ஒருநிமிடத்தில் எத்தனை எண்ணம் எழுகிறது? எண்ணத்தின் வேகம் அதிகமானது. எத்தனை பயனுள்ளது, எத்தனை வீணானது? எத்தனை சக்தி வாய்ந்தருது, சாதாரணமானது எத்தனை? சோதனை செய்யும் கருவி உங்களிடம் உள்ளதா? இல்லையா? அனைவரிடமும் சோதனை கருவி உள்ளதா? ஆசிரியர்களிடம் உள்ளதா? உங்கள் சென்டரில் கம்ப்யூட்டர், இ-மெயில் இருப்பது போன்று இந்தசோதனை கருவியும் உள்ளதா? இரட்டை அயல் நாட்டவரிடம் உள்ளதா? வேலை செய்கிறதா இல்லையா? பாண்டவர்களிடம் சோதனை கருவி உள்ளதா? அனைவரிடமும் உள்ளதா? இல்லையெனில் விண்ணப்பம் செய்யுங்கள். எங்கேனும் அலுவலகம் திறக்க வேண்டுமெனில் முன்னதாகவே கம்புட்டர், இ.-மெயில் டைப் மெசின், ரொக்ஸ் மெசின் வேண்டும் என்று யோசிக்கிறீர்கள் தானே! வேண்டுமல்லவா? அவ்வாறே பிராமணவாழ்வில் உங்களது உள்ளமெனும் அலுவலகத்தில் இந்த மெசின் உள்ளதா இல்லையா?

பாப்தாதா முன்பு கூட கூறியுள்ளார் - இயற்கையும் என்னிடம் கூறுகின்றது நான் தயாராக உள்ளேன்.. நேரமும் பிராமணர்களை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருக்கிறது, பிராமணர்கள் தயாரா? மீண்டும் மீண்டும் பிராமணர்களை வலம் வருகின்றது. பாப்தாதா கேட்கின்றார், தந்தை மகிழும் வண்ணம் கை உயர்த்தி விடுகின்றீர்கள்... பாப்தாதாவும் மகிழ்கின்றார். இப்போது ஒவ்வொரு எண்ணம், நொடி, சுவாசம் யாவும் ஆஹா, ஆஹா என்று சொல்லும் வண்ணம் எவரெடி ஆகுங்கள். ஏன் என்பதல்ல ஆஹா.... ஆஹா... இப்போ தெல்லாம் சில நேரம் ஏன் சில நேரம் ஆஹா என்பதாக உள்ளது. சில நேரம் புள்ளி, சில நேரம் கேள்விக்குறி, சிலநேரம் ஆச்சரியக்குறி வைக்கின்றீர்கள். உங்கள மனமும் சொல்ல வேண்டும். ஆஹா, ஆஹா தொடர்பில் வருபவர்கள் பிராமணர்கள். சேவையில் யாவரும் ஆஹா என்று சொல்ல வேண்டும். நல்லது.

இன்று கிரேட் கிரேட் கிராண்ட் பாதர் பிரம்மா பாபாவின் ஒரு நல்லாசை, பிரம்மா பாபா கூறுகின்றார்: எனது பேரக் குழந்தைகளுக்கு முக்கியமாக ஒரு விசயம் சொல்ல வேண்டும், அது என்ன? ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் எப்போதும் ஆன்மிக புன்னகை இருக்க வேண்டும். கேட்டீர்களா? நன்கு காதை திறந்து கேளுங்கள். மற்றொன்று வாயில் என்றும் இனிமை இருக்க வேண்டும். ஒரு சொல்லும் இனிமையின்றி இருந்து விடக்கூடாது. முகத்தில் ஆன்மிகம், வாயில் இனிமை மேலும் மனம்-புத்தியில் என்றுமே சுபபாவனை, இரக்கம், வள்ளல் தன்மை ஒவ்வொரு அடியிலும் தந்தையை பின்பற்ற வேண்டும். இதனை செய்ய முடியுமா? ஆசிரியர் செய்ய முடியுமா? இளைஞர்கள செய்ய முடியுமா? (ஞான சரோவரில் உள்நாடு, வெளிநாட்டு இளைஞர்களுக்கான ரிட்ரீட் நடை பெற்றது). பாப்தாதாவிடம் இளைஞர்கள் குழுவைப் பற்றிய நற்செய்தி வந்தது. பன் மடங்கு வாழ்த்துக்கள். நல்ல ரிசல்ட். நன்கு அனுபவம் செய்துள்ளீர்கள், பாப்தாதா மகிழ்கின்றார். பாப்தாதாவும் அனுபவங்களை கேட்டார். பிறர் சொல்ல கேட்கவில்லை, நேரடியாகவே பாப்தாதா உங்களுடைய அனுபவத்தை கேட்டார். ஆனால் இந்த அனுபவங்களை அமர் பவ எனும் வரதானத்தால் நிலை பெறச்செய்யுங்கள். என்ன நடந்தாலும் தனது ஆன்மிக அனுபவங்களை எப்போதும் மன்னோக்கி உயர்த்திக் கொண்டே இருங்கள். குறைத்து விடாதீர்கள். மூன்று மாதம் கழித்த மதுபன் வந்தாலும் வராது இருந்தாலும், மூன்று மாதம் அயல் நாட்டிலிருந்து வரமாட்டீர்கள், ஆனால் தனது கணக்கை வையுங்கள். பாப்தாதாவிடம் அனுப்புங்கள், பாப்தாதா சரி செய்வார்... கணக்கிற்கேற்ப சதவிகிதம் தருவார். சரியா? ஆம், ஒரு கை ஓசை செய்யுங்கள். நல்லது.

இன்று வாழ்த்துக்கான நாள். மகிழ்வான செய்தியை பாப்தாதா கேட்டார், பார்த்தார். சின்னக் குழந்தைகளும் கிரீடம் அணிந்து அமர்ந்துள்ளார்கள். உண்மையான உள்ளம் உடையவர்கள் அல்லவா! நல்லது. குழந்தைகளின் ரிசல்ட்டும் பாப்தாதா நன்கு பார்த்தார். வாழ்த்துக்கள். நல்லது.

இரட்டை அயல் நாட்டவர்: இவர்களுடைய தபாலும், கடிதமும் பார்த்தோம். உற்சாகமனா கடிதங்கள். ஆனால் ஒரு விசயம் பாப்தாதா பார்த்தார் - சில சில கடிதங்களில் இருந்தது. சிலர் தனது மிக நல்ல ஊக்கம்-உற்சாகமான மாற்றதை எழுதியுள்ளார்கள், சிலர் உற்சாகத்தின் கூடவே தனது சோம்பலையும் காண்பித்துள்ளார்கள். ஒருபோதும் சோம்பலில் வந்து விடாதீர் கள். உற்சாகமாக இருங்கள். பாப்தாதாவிற்கு ஒன்று சோம்பல் மற்றொன்று மனமுடைதல் பிடிக்காது. எது நடந்தாலும் பெரிய மனம் வையுங்கள். மனமுடைதல் சிறிய உள்ளம் ஆகும். மலர்ந்த உள்ளம் பெரிய உள்ளம். மனமுடைதல், சோம்பல் கூடாது. ஊக்கம் உற்சாகத்துடன் எப்போதும் பறந்து கொண்டேயிருங்கள். பாப்தாதாவிற்கு இரட்டை அயல் நாட்டவர் மீது கோடானகோடி நம்பிக்கை உள்ளது. இரட்டை அயல் நாட்டவர் பாரத தேசத்தவர் மலைத்துப் போகும் வண்ணம் விந்தை செய்து காண்பிப்பார்கள்! வரும், அந்த நாளும் வரும், விரைவில் வரும். வருமல்லவா? அந்நாள் வரயிருக்கிறதல்லவா? வருமா அந்த நாள்? (வெகு விரைவில் வரும்). ஆம் என்று தான் சொல்லுங்களேன். பாப்தாதா முன்னதாகவே வாழ்த்துக்களை தட்டு நிரம்ப தருகின்றார். அத்தகைய தைரியத்தை வெளிநாட்டினர் மீது பாப்தாதா பார்க்கின்றார். அப்படித்தானே! வெளிநாட்டினர் மீது மிகுந்த நம்பிக்கை. நல்லது. இளைஞர்களும்

இருக்கின்றார்கள், இல்லறவாசிகளும் அதிகம் குமாரிகளும் அதிகம் உள்ளனர். விந்தையே விந்தை. சரியா? இந்த சிந்தி குடும்பத்திவர்கள் கூறுங்கள், என்ன விந்தை செய்வீர்களா? பெயருக்குத்தான் சிந்தி. ஆனால் பிராமணர்கள், என்ன செய்வீர்கள், கூறுங்கள். (பாபாவின் பெயரை மிளிர செய்வோம்) எப்போது செய்வீர்கள்? (இந்த ஆண்டில்). உங்கள் வாயில் குலோப் ஜாமுன். தைரியமானவர்கள. (உங்களுக்கு வரதானம் உடன் இருக்கிறது). வரம் தரும் வள்ளலே உடனிருக்கின்றார் எனும் போது வரதானம் என்ன பெரிய விசயம். நல்லது.

இந்த கல்பத்தில் யாரெல்லாம் முதல் முறையாக வந்துள்ளீர்களோ அவர்கள் எழுந்திருங்கள். முதல் முறையாக வந்துள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா கூறுகின்றார்: பின்னால் வந்திருக் கலாம், ஆனால் முன்னால் செல்லுங்கள். உங்களைப் பார்த்து அனைவரும் மகிழும் வண்ணம். அனைவர் வாயிலிருந்தும் விந்தை, (ஆச்சரியம்) விந்தை என்ற சப்தமே வெளிவர வேண்டும். அத்தகைய தைரியம் உள்ளது அல்லவா? முதல் முறை வந்தவர்களுக்கு தைரியம் உள்ளதல்லவா? புத்தாண்டை கொண்டாட வந்துள்ளீர்கள்.. எனில் புதுமை செய்து காண்பிப் பீர்கள் தானே! இருப்பினும் பாப்தாதாவிற்கு குழந்தைகள் அனைவரும் மிகப் பிரியமானவர் களே. நீங்கள் மிக புத்திசாலியான வேலை செய்தீர்கள், டூ லேட் (மிகவும் தாமதம்) என்ற போர்டு போடும் முன்பே வந்து விட்டீர்கள். எனவே இந்த அரங்கத்தில் உட்காருவதற்கு இடம் கிடைத்துள்ளது. கட்டிலோ, தரை விரிப்போ தங்குவதற்கும் இடம் கிடைத்துள்ளது. டூ லேட் போர்டு போட்டுவிட்டால் வரிசையில் தான் நிற்க வேண்டும். நல்ல வேளை பாப்தாதாவின் அறிமுகம் உங்களுக்கு கிடைத்து விட்டது. நல்ல புத்திசாலியான காரியம் இது. நல்லது.

உலகின் நாலாபுறமுள்ள அனைத்து வெற்றி மூர்த்தி குழந்தைகளுக்கு அனைத்தையும் இலாபகரமாக செயல்படுத்தும் தீவிர முயற்சியாளர் குழந்தைகளுக்கு எப்போதும் தனது கணக்கை சோதனை செய்து நாளைய படைக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, என்றுமே தனது ஒவ்வொரு அடியிலும் பாபாவை வெளிப்படுத்தும் கிரேட் கிரேட் கிராண்ட் பாதரின் பேரக் குழந்தைகளுக்கு பாபா மற்றும் தாதாவின் மிக மிக மிக மிக அதிகமான அன்பு நினைவுகள், வாழ்த்துக்கள், நமஸ்காரம்.

பாப்தாதா உள்நாடு, வெளிநாட்டு அனைத்து குழந்தைகளுக்கும் புத்தாண்டிற்கான வாழ்த்துக்களைத் தருகின்றார்.

நாலாபுறமும் உள்ள வெற்றி நட்சத்திரங்களுக்கு பழைய ஆண்டை வழியனுப்பி புதிய ஆண்டிற்கு வாழ்த்து தரும் சங்கம நேரத்தில், சங்கமம் என்றாலே விடை கொடுப்பதும், வாழ்த்து வழங்குவதும். என்றென்றும் வெற்றியே. வெற்றியுடனேயே விளங்குவீர்கள். ஒரு போதும் தோல்வி என்பதன் பெயர் அடையாளமும் இராது. பாப்தாதாவின் தேடிக் கண்டெடுக் கப்பட்ட மிகப்பிரியமான, மிக இனிமையான கண்மணிகள் அனைவரும் முதல் எண்ணில் வர வேண்டும். இந்த உறுதியான எண்ணத்துடன் ஒவ்வொரு அடியும் தந்தைக்கு நிகராக எடுத்து வையுங்கள், பன்மடங்கு கோடானு கோடி மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்... பாப்தாதாவின் மிகவும் மேன்மையான வைரங்களுக்கு வைரக்காலை, வைரக்காலை, வைரக்காலை

வணக்கம். ஓம்சாந்தி

வரதானம் : சேவையின் ஊக்கம், உற்சாகத்தின் மூலம் பாதுகாப்பை அனுபவம் செய்து மாயையினை வென்றவராகுக

எந்த குழந்தைகள் ஸ்தூலமான குடும்ப வேலைகளுடன் ஆன்மீக சேவைக்காகவும், ஓடோடி சதா தயாராகின்றார்களோ அவர்களுக்கு சேவைக்கான ஊக்கம், உற்சாகமும் பாதுகாப்பு சாதனமாகின்றது. சேவையின் இணைந்திருப்பவர்கள் மாயாவிடமிருந்து தப்பித்து விடு கிறார்கள். மாயாவும் பார்த்துவிட்டு இவர்களிடம் நேரமேயில்லை என்று எண்ணி திரும்பிச் சென்று விடுகின்றது. எந்த குழந்தைகளுக்கு பாபா மற்றும் சேவை மீது அன்பு இருக்குமோ, அவர்களுக்கு அபரிமிதமான தைரியமெனும் உதவி கிடைக்கின்றது. அதனால் சுலபமாகவே மாயாவினை வென்று விடுடீகின்றார்கள்.

சுலோகன்: ஞானம் மற்றும் யோகத்தை தனது வாழ்வின் இயல்பாக்கிக் கொண்டால் பழைய இயல்பு (பழக்கம்) மாறிவிடும்.

குறிப்பு: இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை. அகில உலக தியான தனம். பிராமண குழந்தைகள்அனைவரும் ஒருங்கிணைந்து மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை முக்கியமாக திருப்தி மணியாகி சுற்றுச் சூழலில் திருப்தியெனும் ஒளிக்கற்றைகளை பரப்பு வோம். திருப்தியற்ற ஆத்மாக்களுக்கும் திருப்தியுடன் இருப்பதற்கான சக்தி தருவோம்... மனதால் சேவை செய்வோம்....